செய்தி வெளியீட்டு எண்–292 நாள்–18.8.2006

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை.

# பத்திரிகை செய்தி

01.01.2004 முதல் 31.12.2004 மற்றும் 01.01.2005 முதல் 31.12.2005 வரையிலான காலத்தில் தமிழ்நாட்டில் உள்ள வேலை வாய்ப்பகங்களில் தங்களது பதிவுகளை புதுப்பிக்கத் தவறியவர்கள் அவர்களுடைய பதிவினை புதுப்பித்துக்கொள்ள சிறப்புச் சலுகையாக மீண்டும் ஒரு வாய்ப்பளிக்க அரசு முடிவு செய்து கீழ்கண்ட நிபந்தனைகளுடன் ஆணையிட்டுள்ளது.

**(அ) 2004–ஆம் ஆண்டில் புதுப்பிக்கத் தவறிய பதிவுதாரர்களுக்கு**

1) 01.01.2004 முதல் 31.12.2004 வரையிலான காலத்தில் தமிழ்நாட்டிலுள்ள வேலைவாய்ப்பகங்களில் பதிவினை புதுப்பித்துக் கொள்ளத் தவறியவர்கள் அவர்களுடைய பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

2) இச்சலுகை பெற விரும்பும் நபர்கள் இந்த அரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு உரிய ஆவணங்களுடன் மனு செய்யவேண்டும்.

3) இச்சலுகை ஒரு முறை மட்டும் வழங்கப்படும்.

4) மூன்று மாதங்களுக்குப்பின் செய்யப்படும் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

5) 2004–ஆம் ஆண்டிற்கு முன் புதுப்பிக்க தவறியவர்கள் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**(ஆ) 2005 ஆம் ஆண்டில் புதுப்பிக்கத் தவறிய பதிவுதாரர்களுக்கு**

6) 01.01.2005 முதல் 31.12.2005 வரையிலான காலத்தில் தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பகங்களில் பதிவினை புதுப்பித்துக் கொள்ளத் தவறியவர்களுக்கு 1.9.2006 வரை அளிக்கப்பட்ட சிறப்பு புதுப்பித்தல் சலுகை 03.10.2006 வரை நீட்டிக்கப்படுகிறது. இதுவரை மேற்கொண்ட கால வரைக்குள் புதுப்பிக்கத் தவறிய பதிவுதாரர்கள் பதிவினை 03.10.2006–ம் தேதிக்குள் புதுப்பித்துக் கொள்ளலாம்.

**வெளியீடு– இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்புத்துறை**
**தலைமைச் செயலகம்,**
**சென்னை–9**

**Press Release No-292** **Dated-18.8.2006**

LABOUR AND EMPLOYMENT DEPARTMENT

## Press Release

### Letter No.27205/N2/2006-1, dated 18/08/2006.

The Government have issued orders granting Special renewal Concession for the registrants whose renewal has lapsed during the period from 1.1.2004 to 31.12.2004 and 1.1.2005 to 31.12.2005.

(I) **Those who failed to renew during the year 2004**

(i) Those who failed to renew their registration from 1.1.2004 to 31.12.2004 are allowed to renew their registration.

(ii) Registrants should apply to renew their registration to the concerned Employment Exchanges within three months from 17.08.2006 viz. date of issue of Government Order.

(iii) This Concession can be availed only once.

(iv) Applications received after three months will be rejected.

(v) Applications of registrants whose renewal has lapsed before the year 2004, will not be entertained.

**(II) Those who failed to renew during the year 2005**:

The Government have already granted special renewal concession to the registrants who failed to renew their registration during the period from 1.1.2005 to 31.12.2005. The above extension of time allowed already upto 1.9.2006, shall be extended for a further period of one month (i.e) upto 3.10.2006.

Issued By - DIPR, Ch-9.